யார் யார் எல்லாம் அந்த நிர்வாகத்திலே இருந்தார்களோ அந்த அதிகாரிகளை எல்லாம் மாற்றினார். யார் அந்த பொறுப்பை வகித்து இருந்தாரோ அந்த அமைச்சர் அவர்களுடைய போர்ட்போலியோவையும் மாற்றினார். அப்படி ஒரு நீதி விசாரணை கமிஷன் போடுகிறபோது, அதிலே சம்பந்தப்பட்டவர்கள் யார் யார் என்று, எந்த எந்த அதிகாரிகள் இருக்கிறார்களோ அவர்களை எல்லாம் மாற்றிவிட்டு அந்த கமிஷன் போட்டிருக்கவேண்டும். இப்போதுகூட ஒன்றும் நாளாகிவிடவில்லை. யார் யார் அந்த அதிகாரிகள், அந்த மின்சாரத் துறையில், இன்னும்கூட**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **இது எல்லாம் வேறு வேறு வகையான விவகாரம். அது எல்லாம் அவைக் குறிப்பிலே வேண்டாம்** இந்த பிரச்சினையை இத்தோடு முடிக்கவேண்டும். இதற்குள்ளே, ரொம்ப உள்ளே போனால் நீதி (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்போது யார் அமைச்சராக இருந்தாரோ அவரை மாற்றிவிட்டார் என்ற தவறான செய்தியைச் சொல்கிறார்கள். தொடர்ந்து நான்தான் அமைச்சராக இருந்தேன். (சிரிப்பு)

திரு. வி. தண்டாயுதபாணி: போர்ட்போலியோ மாற்றப்பட்டது.

பிற்பகல் 12.25

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, போர்ட்போலியோ என்பதற்கும், அமைச்சர் என்பதற்கும் வித்தியாசம் தெரியாமல் எனக்கு இல்லை. நீங்கள் சொன்னதற்கு நானும்—தொடர்ந்து நான் தான் இருந்தேன் என்றால்-நீங்கள் சொன்ன போர்ட்போலியோவுக்கு அமைச்சராக இருந்தேன் என்று அர்த்தம். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. வி. தண்டாயுதபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு பிரச்சினைகள் வந்ததற்குப் பின்னால், இதிலே வெளிநாட்டுச் செலாவணி, கோல் என்கிற நிலக்கரி, இறக்குமதி என்கிற சொல், இவை எல்லாம் சென்ட்ரல் லிஸ்டில் இருக்கிற காரணத்தால், நீங்கள் நீதி விசா

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

ரணை போட்டால் மட்டும் போதாது. இதிலே அந்நியச் செலாவணியும், இறக்குமதியும், பல மாநிலங்கள் மட்டுமல்லாமல் வெளிநாடும் சம்பந்தப்பட்டிருக்கின்ற காரணத்தினால், மத்திய புலனாய்வுத் துறை விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமென்று நான் இங்கே அன்பாக கேட்டுக்கொண்டு அமைகின்றேன். நன்றி.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கரி என்பது ஓ.ஜி.எல். அதாவது ஓபன் ஜெனரல் லைசன்ஸ் அதிலே டியூட்டி கன்செசன் கொடுப்பதிலே வேண்டுமானால் மத்திய அரசிலே கேட்கலாமே தவிர, நிலக்கரியை இறக்குமதி செய்வதிலே எந்த மாநிலத்திற்கும் தனிப்பட்ட உரிமை இருக்கிறது. ஆகவே, இது ஓபன் ஜெனரல் லைசன்ஸ் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேசுவதற்கு பெயர் கொடுத்திருக்கிற உறுப்பினர்களில், முன்வரிசைத் தலைவர்கள் யாரும் இல்லை. நாளையதினம் எதிர்க்கட்சித் தலைவர் அல்லது அவர்கள் கட்சி சார்பில் பேசுகிற உறுப்பினர் ஒருவர் பேசி, அமைச்சர் பதில் சொல்வதற்குத்தான் நேரம் இருக்கும். எனவே, இன்றைக்கே, பேச விரும்புகிற முன்வரிசைத் தலைவர்களும் பேசிக்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

*டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தின் 1993-94 ஆம் ஆண்டு நிதிநிலை விவர அறிக்கை குறித்தும் 1992-93 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு குறித்தும் இப்பேரவையில் விவாதிக்க வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியினை காணிக்கையாக்கிக் கொள்கின்றேன்.

இந்த அரசு பதவிப் பொறுப்பேற்றபொழுது இருந்த மின் வழங்கல் நிலையை எண்ணிப் பார்க்கிறேன். உயர் அழுத்த தொழிற்சாலைகள் மின்சக்தியைப் பயன்படுத்துவதில் 25 சதவிகிதம் வெட்டும், மின் தேவையில் 30 சதவிகிதம் வெட்டும் இருந்தது. மதிநுட்பம் மிக்க மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய சீரிய திட்டங்களினால் உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கான மின் வெட்டு படிப்படியாகக் குறைக்கப்பட்டு, இன்று அடியோடு நீக்கப்பட்டிருக்கிறது என்பது பாராட்டுவதற்குரியது, மற்ற மாநிலங்களிலுள்ள மின்நிலையோடு ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் மின் நிலைமை நல்ல நிலையில் உள்ளது என்பது, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நிர்வாகத் திறமைக்கு ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

1993 அக்டோபர் 26] [டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்]

அதேபோல, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட வளாகத்தி லுள்ள காடம்பாறை மின் நிலையம் 1990-ஆம் ஆண்டு தீவிபத் திற்கு உட்பட்டபொழுது எந்த அரசு இந்த மாநிலத்தை ஆண்டு கொண்டிருந்தது என்பது உங்களுக்கு நன்றா கத் தெரியும். அந்த சேதம் புரட்சித் தலைவி அவர் களுடைய ஆட்சியில்தான் சரி செய்யப்பட்டது என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, 1992—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பருவ மழையின்போது தண்ணீரில் மூழ்கிப்போன சேர்வலாறு மின் உற்பத்தி நிலையம் முழுமையாக 9-8-1993, அதாவது 8 மாதங்களுக்குள்ளாக முடிக்கப்பட்டு சீரமைக்கப்பட்டது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

தூத்துக்குடி அனல் மின் நிலையமும், மேட்டூர் அனல் மின் நிலையமும் உற்பத்தித் திறனுக்காக பரிசைப் பெற தகுதி பெற்றுள்ளதையும் பாராட்ட வேண்டும். மின் உற் பத்தித் திறனை உயர்த்துவதற்காக மேற்கொள்ள இருக்கும் கூடுதல் திட்டங்கள் அனைத்தும் பாராட்டுவதற்குரியன.

இப்படி பாராட்டுதல்களைப் பெறுகின்ற நேரத்தில், தமிழ்நாட்டில் பல்வேறு மத்திய அரசு மின் திட்டங்களை செயலாக்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதை குறித்து நம்முடைய அரசு பெரிதும் கவலை கொண்டுள்ளது.

மக்களுடைய வரிப் பணத்தை வீணாக்குகிறார்கள் என்று சொன்னவர்கள், இங்கே, தமிழ்நாட்டிலே மத்திய அரசி னுடைய மின் திட்டங்களை செயலாக்குவதில் காலதாமதம் ஏற்படுவதை மத்திய அரசுக்குச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டவர்கள் என்பதை நான் இந்த மன்றத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, தென்னக எரிவாயு மின்தொகுப்புத் திட்டம் விரைவில் முடிக்கப்பட வேண்டுமானால், தென்னக மாநிலங் கள் ஒன்று சேர்ந்து நிதி பங்கேற்பு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கருத்தை ஏற்று, இதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற் கொள்ள வேண்டுமென்று இந்த மன்றத்தின் வாயிலாக வற்புறுத்துகிறேன். இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையிலே மின்சக்தி எந்தத் தொழிலுக்கும் பயன்படக்கூடிய ஒரு எரிசக்தி ஆதாரம் என்பதோடுகூட இது ஏனைய எரிசக்தியை காட்டிலும் மிகச் சிறந்த வணிக எரிசக்தி என்று கூறியிருக்கிறார்கள். இது மறுக்கமுடியாத